# 100 நாள்கள் டெஸ்ட்: உங்கள் கரியர் சிம்மாசனத்தை உறுதிசெய்வது எப்படி?

வெ.கௌசல்யா

3 Min Read

**அடுத்தகட்டம் ஆர் யூ ரெடி? - புதிய பகுதி 1**

Published:19 May 2026 5 AMUpdated:19 May 2026 5 AM



**இன்றைய வேகமான** கார்ப்பரேட் உலகில், ஒரு வேலையைப் பெறுவது எவ்வளவு சவாலானதோ, அதைவிடப் பல மடங்கு சவாலானது அந்த வேலையைத் தக்கவைத்துக் கொள்வதும், அடுத்தடுத்த நிலைக்கு முன்னேறுவதும். பல நேரங்களில், தகுதியும் திறமையும் இருந்தும் பலரால் குறிப்பிட்ட நிலைக்கு மேல் நகர முடிவதில்லையே... ஏன்? உழைப்பைத் தாண்டி உயர் பதவிகளுக்குத் தேவைப்படும் அந்த ரகசியச் சூத்திரம்தான் என்ன?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளோடு உங்கள் கரியரை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்ல வழிகாட்டுவதுதான் இந்தத் தொடர். இதழ்தோறும் வெவ்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் உங்களுக்கு வழிகாட்ட இருக்கிறார்கள். பதவி உயர்வுக்கு ஓர் ஊழியரிடம் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதிகள் குறித்துப் பேசுகிறது தொடரின் முதல் பகுதி. அது குறித்து விளக்குகிறார், **சென்னையைச் சேர்ந்த Beacon Consulting Line நிறுவனத் தலைவர் மற்றும் மனிதவள மேம் பாட்டுத் துறை நிபுணர் ஜெகஜனனி.**

‘`ஓர் ஊழியர் பதவி உயர்வு பெறுவதற்கு கடின உழைப்பு மட்டுமே போதாது. அதைத் தாண்டி, அவர்களின் மறைந் திருக்கும் தகுதிகளையும் நிறுவனங்கள் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. ஒரு பணியாளர் நெருக்கடியான சூழல்களை எப்படிக் கையாள் கிறார், சக ஊழியர்களுடன் இணக்கமாகச் செயல்படுகிறாரா மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சிக்குத்

தானாக முன்வந்து கூடுதல் பொறுப்புகளை எப்படி ஏற்கிறார் போன்ற நுட்பமான திறன்களே அவரை அடுத்த நிலைக்கு உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஒருவரை வேலைக்கு எடுக்கும்போது, நாம் அவரின் அடிப்படைத் திறன்கள் மற்றும் கடந்த கால அனுபவத்தை வைத்துதான் எடை போடுகிறோம். குறிப்பாக, அவரின் கல்வித்தகுதி, அவரின் முந்தய கால புராஜெக்ட், எங்கு பணிபுரிந்திருக்கிறார் என்பதையெல்லாம் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து பணியில் அமர்த்தலாம். ஆனால், ஒருவருடைய முழுத் திறமையும், பலம் மற்றும் பலவீனங்களும் அவர் நிறுவனத்தில் சில காலம் பணியாற்றிய பிறகுதான் தெரியவரும்.



**சுய உந்துதல்!**

கொடுக்கப்பட்ட பணியை அவர் எப்படி உற்சாகத்துடன் அணுகுகிறார் என்பதைத் தாண்டி, தன்னுடன் இருப்பவரையும் எப்படி மோட்டிவேட் செய்கிறார் என்பதையும் நிறுவனத்தில் கவனிப்பார்கள். குறிப்பாக, வேலையை அணுகும் முறை... சிலர் கொடுத்த வேலையை மட்டும் செய்வார்கள். சிலர் அந்த வேலையை இன்னும் நுணுக்கமாகக் கற்றுக் கொண்டு, தாமாக முன்வந்து நிறைய வேலை களைச் செய்வார்கள். சுய உந்துதல் உள்ளவர்கள் அலுவலகத்திற்கு வரும்போதே மிகுந்த உற்சாகத்துடன் வருவார்கள். வேலையை ரசித்து, துரிதமாகச் செய்வதுடன் மற்றவர்களுக்கும் உதவுவார்கள். இதற்கு நேர்மாறாக, சிலர் `நீ ஏன் தேவைக்கு மேல வேலை செய்யற?' என்று மற்றவர்களையும் திசைதிருப்பும் நபராக இருப்பார்கள். இது நிறுவனத்தின் சூழலை பாதிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்வோம். இதில் சுய உந்துதல் உள்ளவர்கள் அடுத்தகட்டத்தை நோக்கிச் செல்வதற்கு பல வாய்ப்புகள் உள்ளன.

தன்னுடைய வேலையில் மட்டும் கவனம் செலுத்தாமல், தனது வேலை மற்ற துறைகளை எப்படி பாதிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் (Feed

forward & Feed backward). இங்கு நாம் செய்யும் ஒவ்வொரு பணியும் நாம் செய்யும் வேலையை மட்டும் பாதிக்காது. அது நம்முடைய உயரதிகாரியின் பணியையும், தனக்கு அடுத்த நிலையில் உள்ளவரின் நிலையையும் பாதிக்கும் என்பதை கவனத்தில் கொண்டு செயல் படுபவர்களை நிறுவனம், அடுத்த நிலைக்கான தேர்வாக வைக்கும்.

**திறமை மற்றும் மனப்பாங்கு!**

`மனப்பாங்குக்காக வேலைக்கு எடு, திறமைக் காகப் பயிற்சி கொடு' (Hire for attitude, train for skill) என்பது பழைய உத்தி. இன்று திறமை (Skill) மற்றும் மனப்பாங்கு (Attitude) ஆகிய இரண்டுமே மிக முக்கியம். நிறுவனங்களைப் பொறுத்தவரை அடிப்படை திறமையைக் கொண்டிருப்பவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு அடுத்தகட்ட பணிக் கான திறமையை வளர்க்க வைப்பதும், அதனை அவர்கள் எவ்வளவு விரைவில் பயில்கிறார்கள் என்பதும் முக்கியமாகப் பார்க்கப்படுகிறது.

**அணுகுமுறை!**

வேலை தெரிந்தால் மட்டும் போதாது, அணுகு முறை (Approachability) சரியாக இல்லையென்றால் நிறுவனத்தில் பணியாளர்கள் மகிழ்ச்சியாக வேலை செய்ய மாட்டார்கள். நல்ல அணுகுமுறை இருந்து வேலை தெரியவில்லை என்றாலும் சிக்கல்தான். கீழிருப்பவர்கள் கேட்கும் சந்தேகங் களுக்குத் தீர்வு சொல்லத் தெரியாவிட்டால் மதிப்பு இருக்காது. எனவே, திறமை மற்றும் விருப்பம் இரண்டுமே சமமாக இருக்க வேண்டும்.

**நிபுணத்துவம்!**

மிக முக்கியமாக நம்முடைய பணியில் அடுத்தடுத்து செல்வதற்கு தற்போதைய வேலையில் முதலில் நிபுணத்துவம் பெற வேண்டும். அப்போதுதான் நாளை நீங்கள் மேலாளர் ஆகும்போது, உங்கள் கீழ் இருப்பவர்களுக்கு வழிகாட்ட முடியும். உங்களுக்கு வேலை தெரியவில்லை என்றால், உங்கள் டீம் உங்களை ஏமாற்ற வாய்ப்புள்ளது.

**தலைமைத்துவம் மற்றும் பொறுப்பு உணர்வு!**

தலைமைத்துவம் மற்றும் பொறுப்பு உணர்வும் மிக முக்கியமான இடம் பெறுகின்றன. வளர்ச்சிக்கு மற்றவர்களை வேலை வாங்கும் திறமை அவசியம்.

பொதுவான பொறுப்புகளை ஏற்றல் என்பது பெரும் கலையாகவே பார்க்கப்படுகிறது. யாரும் செய்ய விரும்பாத கடினமான அல்லது வேண்டாத வேலைகளை (Messy jobs) தாமாக முன்வந்து செய்வது (Volunteer) உங்கள் பொறுப்பு உணர்வைக் காட்டும். புதிய பணியாளர்களுக்கு வழிகாட்டுவது (Handholding) மற்றும் மேலாளரின் வேலைப்பளுவைக் குறைக்க சில பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது தலைமைத்துவத்தின் அடையாளமாகக் கருதப் படுவதால் அதனை கண்டிப் பாக நிறுவனத்தினர் கவனத்தில் வைத்திருப்பர்.

**அழுத்தத்தைக் கையாளுதல்!**

சிறிதளவு பதற்றம் ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்ய உதவும். ஆனால், எல்லை மீறிய வேலைப்பளு (12-14 மணிநேரம்) ஒருவரை முடக்கிவிடும். அழுத்தம் அதிகமாகும் போது மேலாளரிடம் பேசி, கூடுதல் நேரமோ அல்லது உதவியாளரையோ கேட்டுப் பெறுவது சிறந்தது. இதன் மூலம் நீங்கள் வேலையை எவ்வளவு புரிந்து கொண்டுள்ளீர்கள், எவ்வளவு துரிதமாக அதை அணுக நினைக்கிறீர்கள் என்பதையெல்லாம் புரிந்துக்கொள்வார்கள்.

**குழுவாகச் செயல்படுதல்!**

சமூகத் தொடர்புத் திறன்கள் (Interpersonal skills) மிகவும் முக்கியம். யாருக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து பேசத் தெரிய வேண்டும். டேட்டா (Data) விரும்பும் மேலாளரிடம் புள்ளிவிவரங்களுடன் பேச வேண்டும். மக்கள் மீது அக்கறை கொண்ட மேலாளரிடம் உணர்வுபூர்வமாகப் பேச வேண்டும்.

**புரொஃபஷனல் பிராண்டிங்!**

நம்மைப் பற்றி நாமே தம்பட்டம் அடித்துக் கொள்ளாமல், நமது வேலையின் தரம் மற்றும் வேகம் மற்றவர்களைப் பேச வைக்க வேண்டும். குறிப்பாக, வேலையில் சேர்ந்த முதல் 100 நாள்கள் மிக முக்கியம். அப்போது நீங்கள் செய்யும் பணிகள் அனைத்தும் நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ் இருக்கும்.

தோற்றம்!

உங்களுக்கென்று தனித்துவமான ஓர் அடை யாளத்தைப் பேணுங்கள். நேர்த்தியான ஆடை, நிதானமான பார்வையுடன், பணியை அணுகும் விதத்திலும் தெளிவாக இருப்பது நல்லது.

**உயர் பதவி வாய்ப்புகள்!**

உயர் பதவிகளுக்குச் செல்லும்போது தேர்வுகள் வெளிப்படையாக இருக்காது. எனவே, நிறுவனத்தின் இலக்குகளைக் கவனித்து, அதற்கேற்ப உங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**ஃபீட்பேக்!**

மேலாளர் சொல்லும் வரை காத்திருக்காமல், நீங்களாகவே முன்வந்து உங்கள் பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றி கருத்து கேட்டுத் தெரிந்து கொண்டு உங்களை மேம்படுத்துங்கள்.

**AI மற்றும் எதிர்காலம்!**

AI வேலைகளைப் பறிக்கும் என்று பயப் படாமல், அது உங்கள் வேலையை எப்படி எளிதாக்கும் என்று பாருங்கள். அறிக்கை தயாரிக்கும் வேலையை AI செய்தால், அந்தத் தர்வுகளைக் கொண்டு முடிவெடுக்கும் திறனை வளர்த்துக்கொள்ளுங்கள்.

**தொடர் கற்றல்!**

புதியவற்றைத் தாமாக முன்வந்து கற்றுக்கொள் வதும், காலாவதியான பழைய முறைகளை மறப்பதும் மிக அவசியம்.

பதவி உயர்வு என்பது வெறும் அங்கீகாரம் மட்டுமல்ல.. உங்களின் திறமை, அணுகுமுறை மற்றும் பொறுப்பு உணர்வுக்குக் கிடைக்கும் நற்பெயர். இதை உணர்ந்தால், உயரங்கள் உங்களைத் தேடி வரும்!

- *கற்போம்...*